# சபை வாழ்க்கை

Transcribed from a message spoken in April, 2013 in Chennai

By *R.S. Milton*

## தேவனுடைய சபை என்றால் என்ன

நாம் தேவனுடைய மக்கள். நாம் தேவனுடைய சபை. நம் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். ஆனால், நாம் வாழ்கிற விதம், நம் நடைமுறைப் பயிற்சிகள் ஆகியவைகளெல்லாம் தேவனுக்குமுன் மிகவும் அருமையானவை. இதை நாம் மறந்துவிடக்கூடாது. நாம் பொழுதுபோக்குபோல வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றோ அல்லது ஏதோ சில காரியங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக் கிறோம் என்றோ ஒருபோதும் நினைக்கக்கூடாது. நாம் வாழ்கிற விதமும், நாம் செய்கிற காரியங் களும் தேவனுக்குமுன்பாக மதிப்புடையவைகள் அல்லது அருமையானவைகள். அப்படியில்லை யென்றால் நாம் இப்படி வாழவேண்டிய அவசியம் இல்லை. எனவே, நாம் இதை மேலோட்ட மாகவோ அல்லது அற்பமாகவோ அல்லது ஏனோதானோவென்றோ எடுத்துக்கொள்ளக்கூடாது.

நம்மெல்லாருக்கும் மிக எளிமையான காரியம் என்ன? ஒரு பெரிய கூட்டம் இருக்கிறதென்றால் அந்தக் கூட்டத்தில் ஓர் உறுப்பினராக அல்லது அங்கத்தினராகப் போய் சேர்ந்துகொள்வது, கலந்து கொள்வது, பங்கெடுத்துக்கொள்வது எல்லாருக்கும் எளிதான காரியம். இதை நாம் எல்லாரும் செய்யலாம். இதுதான் நம்மெல்லாருக்கும் எளிமையான காரியம். நாம் இப்படிச் செய்வதில்லை என்பதற்குக் காரணம் இருக்கிறது. ஏனென்றால், தேவன் ஏதோவொன்றை விரும்புகிறார் என்று நாம் அவருடைய வேதத்திலிருந்து புரிந்திருக்கிறோம். அவர் விரும்புவதை ஒரு பெரிய அளவில் நம்மால் நடைமுறைப்படுத்த முடியாவிட்டாலும், ஒரு சிறிய அளவில் நாம் அதை நடைமுறைப்படுத்துகிறோம். ஏற்ற காலத்தில் தேவன், “ஆ! இதைத்தான் நான் செய்ய விரும்பினேன். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன்,” என்று அவர் நிரூபிப்பார் என்று நாம் நம்புகிறோம். எனவேதான், பெருந்திரளானவர்கள் செய்வதை நாம் செய்யவில்லை.

உண்மையிலேயே தேவனுடைய சபை என்றால் என்ன? சபை. இந்த வார்த்தையை நாம் அடிக்கடி கேள்விப்படுவோம். இந்த வார்த்தையைக் கேள்விப்படாதவர்கள், அறியாதவர்கள் இருக்கமாட் டார்கள். தெரியாத கிறிஸ்தவர்கள் மட்டும் அல்ல, அவிசுவாசிகள்கூட இருக்கமாட்டார்கள். எல்லாருக் கும் இந்த வார்த்தை தெரியும். Main stream churches என்று அழைக்கப்படுகிற ரோமன் கத்தோலிக்க சபை அல்லது சிஎஸ்ஐ சபைகளில் நாம் கலந்துகொள்ளவில்லையென்றால், “நீங்கள் சபைக்குப் போகிறவர்களா?” என்று சிலர் கேட்பார்கள். சிலர் “ஞாயிற்றுக்கிழமை நீங்கள் எந்த சபைக்குப் போகிறீர்கள்?” என்று கேட்கும்போது, “நாங்கள் வீட்டில் கூடிவருகிறோம்,” என்றால் “ஓ! நீங்கள் fellowship?” என்பார்கள். மக்கள் தங்கள் புரிந்துகொள்ளுதலுக்கேற்ப ஒரு வார்த்தையைப் பயன் படுத்துகிறார்கள். “இது church, இது சபை, இது Fellowship” என்று அவர்களே பல வார்த்தை களைப் பயன்படுத்துகிறார்கள். மக்கள் ஒரு பெரிய கட்டிடத்தில் கூடிவராமல் ஒரு வீட்டில் கூடிவந் தால் அது “Fellowship” என்று மக்கள் நினைக்கிறார்கள், கூறுகிறார்கள்.

ஆனால், உண்மையிலேயே *தேவனுடைய சபை* என்றால் என்ன அல்லது தேவனுடைய பார்வை யில் அவருடைய சபை என்றால் என்ன என்பதை தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் புரிந்துகொள் வதற்கு முயற்சிசெய்ய வேண்டும். அதைப் புரிந்துகொள்வதில் பெரிய ஆசீர்வாதம் இருக்கிறது. நாம் உண்மையில் தேவன் விரும்புகிற வண்ணம் சபையாக இருக்கும்போது அங்கு தேவனுடைய ஆசீர்வாதம் இருக்கும். இதை நாம் மறந்துவிடக் கூடாது.

## பாவமன்னிப்பும், நித்திய ஜீவனும்

இதை நாம் அடிக்கடி வலியுறுத்தியிருக்கிறோம். மீண்டும் நான் இதை வலியுறுத்த விரும்புகிறேன். அது என்னவென்றால் நாம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள் ளும்போது அல்லது விசுவாசிக்கும்போது அவர் நம் பாவங்களை மன்னிக்கிறார். அது மட்டும் அல்ல. அவர் தேவனுடைய ஜீவனை நமக்கு வழங்குகிறார். இந்த இரண்டு காரியங்களை நாம் மறந்துவிடக்கூடாது. நான் திரும்பவும் சொல்கிறேன்.

நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது தேவன் நமக்கு இரண்டு மாபெரும் ஆசீர்வாதங்களை வழங்குகிறார். ஒன்று பாவமன்னிப்பு, இன்னொன்று தேவனுடைய ஜீவன். நீங்கள்

இதைத் தெரிந்துகொண்டால்கூட உங்கள் வாழ்க்கை மிகவும் புரட்சிகரமான வாழ்க்கையாக இருக்கும். தேவனுடைய மக்கள் பலருக்கு நற்செய்தியின் இந்த அடிப்படைகூடத் தெரியாது என்பது உண்மை. “ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்கு என்ன செய்தார்?” என்று கேட்டால் அவர்கள் என்ன சொல்வார்கள்? “இயேசு கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தார்,” என்று சிலர் சொல்வார்கள். தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் ஏறக்குறைய இதைச் சொல்வார்கள். “இயேசு கிறிஸ்து எனக்குப் பாவ மன்னிப்பைத் தருவதற்காகத் தம் இரத்தத்தைச் சிந்தினார். அவரை விசுவாசிக்கும்போது அவர் எனக்கு தேவனுடைய ஜீவனையும் தருகிறார்,” என்று தேவனுடைய பிள்ளைகள் பலர் சொல்லி நான் கேட்டதில்லை. இதை அறிந்திருக்கிற, இதைச் சொல்லுகிற தேவனுடைய பிள்ளைகள் பலரை நான் சந்தித்ததில்லை.

வாய்ப்பு கிடைத்தால் நீங்கள் தேவனுடைய பிள்ளைகளைச் சந்திக்கும்போது இந்தக் கேள்வியை அவர்களிடம் கேட்டுப்பாருங்கள். “எனக்குத் தெரியும், உனக்குத் தெரியுமா?” என்ற பாணியில் கேட்க வேண்டாம். “உங்கள் அனுபவத்தை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்ததால் உங்களுக்கு என்ன நடந்தது?” என்று கேட்டுப்பாருங்கள். சிலர் இந்த இரண்டில் ஒன்றைக்கூட சொல்லமாட்டார்கள். “நான் கடனில் இருந்தேன். அவர் கடனிலிருந்து என்னை விடுதலையாக்கினார். நான் நோயில் இருந்தேன். அவர் எனக்கு நல்ல சுகம் கொடுத்தார்,” என்றெல்லாம் சொல்வார்கள். அது அவர் செய்கிற நன்மைதானா? நன்மைதான். ஆனால், அது சுவிசேஷம் அல்ல. அது ஒரு தகப்பன் தன் பிள்ளைகள் எல்லாருக்கும் வழங்குகிற நன்மை. கடனிலிருந்து விடுதலையாக்குவது, நோயிலிருந்து சுகமாக்குவதுபோன்ற காரியங்களையெல்லாம் எதற்குக் கொண்டுவரலாம் தெரியுமா? அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணுகிறார். சூரியனையும், மழையையும் பூமியிலுள்ள எல்லா நன்மைகளுக்கும் நாம் விரிவுபடுத்திக்கொள்ளலாம்.. மனைவி, கணவன், நல்ல பிள்ளைகள், செல்வம், வேலை, படிப்பு, வருமானம், வீடு, சுகம், சாப்பாடுபோன்ற எல்லா நன்மைகளையும் தேவன் கொடுக்கிறார். ஏனென்றால், எப்படிப் பிள்ளைகளைப்பற்றிய பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கிறதோ அதுபோல மனிதர்களை உண்டாக்கும்போது அவர்களைக்குறித்த பொறுப்பு தேவனிடத்தில் இருக்கிறது. தேவன் பொறுப்பற்ற தேவனோ அல்லது பொறுப்பற்ற தந்தையோ இல்லை. தாம் உண்டாக்கின எல்லா மனிதர்களுக்கும் அவர் பொறுப்புள்ளவர். இது ஆச்சரியமாக இருக்கலாம்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் தேவனோடு தந்தை–பிள்ளை என்ற உறவுக்குள் வருகிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காத, சொல்லப்போனால் இயேசு கிறிஸ்துவை எதிர்க்கின்ற, மக்களுக்குங்கூட அவர் தேவனாக இருக்கிறார், அவர்களுடைய சிருஷ்டிகராக இருக்கிறார். அவர்களுக்கும் அவர் நன்மைகளை வழங்குகிறார். இது நம்புவதற்கு நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஏனென்றால், நம்முடைய மனித குணத்தின்படி நம்மை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு அல்லது நம்மை எதிர்க்கிறவர்களுக்கு அல்லது நமக்குப் பகையாக, எதிராக இருப்பவர்களுக்கு நாம் நன்மைகளை வழங்கமாட்டோம். அது மனித குணம். அது மனித சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கின்ற ஒன்று. எனவே, தேவனும் அப்படித்தான் இருப்பார் என்று நாம் நினைக்கின்றோம். அப்படியல்ல, சில சமயங்களில் தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு அவர் வழங்குகிற நன்மைகளைவிட நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் அவர் வழங்குகிற நன்மை அதிகம் என்பதுபோல் தோன்றலாம். புதிய ஏற்பாட்டில் நாம் இப்படி வாசிக்கிறோம். “அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்கிறவராக இருக்கிறாரே”. இதைக் கொஞ்சம் யோசித்துப்பார்க்க வேண்டும். சங்கீதத்தில் ஆசாப் எழுதுகிறான். “அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது. அவர்கள் இருதயம் விரும்புகிறதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது. அவர்கள் வெற்றிபெறுகிறார்கள்” (சங். 73:7). இது ஆசாபின் அனுபவம். “அவர்களுக்குத் தானியமும் திராட்சை ரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்”. இது தாவீதின் அனுபவம்.

## சுவிசேஷம்

எனவே தேவனுடைய நற்செய்தி, சுவிசேஷம், என்றால் என்ன? தேவன் என் பாவங்களையெல்லாம் மன்னித்திருக்கிறார். அதற்கும்மேலாக தேவனுடைய ஜீவனையே அவர் எனக்கு வழங்கியிருக்கிறார். நான் இதை ஏன் வலியுறுத்துகிறேன் என்றால் மனிதனுடைய வாழ்க்கையில் பல போராட்டங்கள் உண்டு. இந்தப் போராட்டங்களுக்கு எப்படி தீர்வு காண்பது என்று நமக்குத் தெரியாது. ஒரு மனிதன் தான் ஒரு குரு என்று சொல்லுகிறான் என்று வைத்துக்கொள்வோம். மக்களுடைய போராட்டங்களுக்குத் தன்னால் தீர்வு சொல்லமுடியும் என்றால் அப்படிப்பட்ட மனிதனிடம் எல்லாரும் போவார்கள்.

இந்த நாட்டில் எப்படிப்பட்ட மனிதனும் "குருவியாபாரம்" நடத்தினால் குறைந்தது ஆயிரம் பேராவது அவன் பின்னால் போவார்கள். நல்ல இலாபம் கிடைக்கும். இதை நாம் இந்த நாட்டிலும் பார்க் கிறோம். இந்த நாட்டிற்கு வெளியேயும் பார்க்கிறோம். ஏனென்றால், மக்களுடைய உடனடித் தேவை என்னவென்றால் "என்னுடைய போராட்டத்துக்கு, என்னுடைய தேவைக்கு, எப்படி தீர்வுபெறுவது?" ஒன்றும் வேண்டாம். ஒரு கிளியை வைத்துக்கொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டால் அவனுக்கும் அன்றைக்கு பிழைப்பு நடக்கிறது. இது ஆச்சரியமாக இருக்கிறது. அவனுக்கு பிழைப்பு ஓடவில்லையென்றால் அந்தத் தொழிலை விட்டுவிட்டு அவன் வேறு தொழிலுக்குச் சென்றிருப்பான். ஆனால், அவன் அந்தத் தொழிலைத்தான் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறான். அப்படியானால் என்ன பொருள்? கிளி ஜோசியம் பார்ப்பவனுக்கும் இந்த நாட்டில் வருமானம் கிடைக்கிறது. ஏனென் றால், மக்கள் தன் போராட்டத்துக்குத் தீர்வை "ஒரு கிளி சொல்லிவிடாதா, ஒரு குருவி சொல்லி விடாதா!" என்று அலைகிறார்கள். "அது சொல்லிவிடாதா, இது சொல்லிவிடாதா?" என்று மனிதன் ஏங்குகிறான். "கிளி ஜோசியக்காரன் மற்றவர்களுடைய வாழ்க்கைக்குத் தீர்வுசொல்லுவான். ஆனால் அவனுடைய வாழ்க்கைக்குத்தான் தீர்வு இல்லை" என்ற பொருளில் ஒரு ஹைக்கூ கவிதை உண்டு.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்கு பாவமன்னிப்பு, நித்திய ஜீவன் ஆகிய இரண்டை யும் வழங்கியிருக்கிறார். இந்த இரண்டையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த இரண்டையும் நான் கொஞ்சம் வலியுறுத்த விரும்புகிறேன். இந்த இரண்டும் நம் போராட்டங்களையும், சிக்கல்களை யும் உடனடியாகத் தீர்ப்பதுபோல் நமக்குத் தோன்றாது. நமக்கு இன்றைக்கு ஒரு தீராத போராட்டம் இருக்கும். இந்தப் போராட்டத்துக்கு உடனடியாகத் தீர்வு கிடைக்காதா என்று நாம் ஏங்குவோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாவமன்னிப்பையும், நித்திய ஜீவனையும் தருகிறார் என்று சொல் லும்போது "அவை என் போராட்டத்தைத் தீர்ப்பதுபோல் தோன்றவில்லையே!" என்று நாம் எண்ணக் கூடும். நான் ஒன்று சொல்லுவேன். காலப்போக்கில் அல்லது தொலைநோக்கில் அல்லது நீண்ட காலப்போக்கில் தேவனுடைய சத்தியத்தில் நாம் ஊன்றக் கட்டப்படுவதுதான் மகிழ்ச்சியான, சமாதானமான, கனிநிறைந்த வாழ்க்கை வாழ்வதற்குரிய வழி. திரும்பவும் சொல்லுகிறேன். தொலை நோக்குப் பார்வை அல்லது நீண்ட காலப்போக்கு அல்லது நித்தியத்திற்கும் இந்த வாழ்க்கை மகிழ்ச் சியும், சமாதானமும், கனிநிறைந்ததுமான வாழ்க்கையாக இருக்க வேண்டுமென்றால் தேவனுடைய சத்தியத்தில் நாம் ஊன்றக் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

உண்மையிலேயே தேவனுடைய சத்தியம் அல்லது சுவிசேஷம் என்றால் என்னவென்று நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். இது என் இரண்டாவது குறிப்பு.

### இடுக்கமான வாசல்

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் குணத்தை நமக்குள் உருவாக்குதற்காக, நம் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்து நம் வாழ்க்கையின்மூலம் வெளிப்படுவதற்காக, தேவன் நமக்கு பாவமன் னிப்பையும், நித்திய ஜீவனையும் வழங்கியிருக்கிறார். இது தேவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து வெளிப்படுகின்றார், இயேசு கிறிஸ்துவின் குணம் வெளியாகிறது என்றால் அதைப்போல் முழுப் பிரபஞ்சத்திலும் தேவனுக்கு மகிழ்ச்சியைத் தருவது வேறொன்றும் இல்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் குணம் எனக்குள் உருவாவ தற்கும், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை என்மூலம் வெளிப்படுவதற்கும் நான் ஒரு விலை கொடுக்க வேண்டும். ஏனென்றால், இயேசுகிறிஸ்துவின் குணம் என்மூலம் வெளியாக வேண்டும் என்றால் என் குணம் என்னவாகும்? அது வெளியாக முடியாது. நம் குணத்தை வெளியாக்குவதுதான் நம் எல்லா ருக்கும் மிக மகிழ்ச்சியைத் தரும். நமக்கு எது சுலபமாக வருகிறதோ அதை வெளியாக்குவதுதான் நமக்கு வசதி. எனவே, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை நம்மூலம் வெளியாவதற்கு நாம் ஒரு விலைக்கிரயம் செலுத்த வேண்டும்.

விலை செலுத்துகிற எந்த வழியையும் மக்கள் தெரிந்தெடுக்க மாட்டார்கள். "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்: கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்," என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். அதைக் கண்டுபிடித்தபின் அதில் நடக் கிறவர்கள் இன்னும் சிலர். ஜீவனுக்குப் போகிற வாசல் வசதியாக இருக்கும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பொய் வாக்குறுதி கொடுக்கவில்லை. குருக்கள், சற்குருக்கள், சாமியார்கள், சந்நி யாசிகள், காவி உடைக்காரர்கள்போன்ற பலரை நான் பார்க்கிறேன். அவர்களை விட்டுவிடுவோம். வரம் பெற்ற சில மனிதர்களைப் பார்ப்போம். ஜீவனுக்குப்போகிற வாசல் நெருக்கமானது, குறுக

லானது என்று அவர்கள் சொன்னால் நீங்கள் அவர்களைப் பின்பற்றுவீர்களா? அதாவது நீண்ட காலப்போக்கில் உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியும், சமாதானமும், கனி நிறைந்ததுமான வாழ்க்கையாக இருக்கும். ஆனால் நீ அதைத் தொடங்கும்போது உன் முதல் படி, இரண்டாவது படி, மூன்றாவது படி நெருக்கமாகவும், குறுகலாகவும் இருக்கும் என்றால் நீங்கள் காலடி எடுத்து வைப்பீர்களா? நாம் தயங்குவோம். முதலாவது அகலமாக, விசாலமாக, வசதியாக இருக்க வேண்டும் என்றுதான் நாம் எல்லாரும் விரும்புவோம்.

ஒரு சிறிய எடுத்துக்காட்டு தருகிறேன். என் வருமானத்தில் என்னால் ஒரு கார் வாங்க முடியாது. ஆனால், கார் வாங்கினால் எனக்கு வசதியாக இருக்கும். கடன்வாங்கி இப்போதைக்கு கார் வாங்க வேண்டாம் என்று தீர்மானிக்கிறேன். இப்போது இது குறுகலான வாசலா அல்லது விசாலமான வாசலா? கடன் வாங்கி ஒரு மோட்டார் சைக்கிள் வாங்க வேண்டாம் என்று நான் ஓர் ஆலோசனை சொல்லுகிறேன் என்று வைத்துக்கொள்வோம். கேட்பவருக்கு இது இப்போது வருத்தமாக இருக்கும். ஏனென்றால், ஒரு மோட்டார் சைக்கிள் இருந்தால் எவ்வளவு வசதியாக இருக்கும்! இப்போது இவர் படித்துக்கொண்டிருக்கிறார். கல்லூரிக்குச் செல்வதற்கு அல்லது வேலைக்குச் செல்வதற்கு அல்லது பரிசுத்தவான்களைப் போய்ப் பார்ப்பதற்கு அது மிகவும் வசதியாக இருக்கும். இல்லையா? அப்படி கடன் வாங்கி வாங்க வேண்டாம் என்று நான் சொல்லுகிறேன். அப்படிச் சொல்லும்போது நான் வாசலைக் குறுகலாக்குகிறேன். வழியை நெருக்கமாக்குகிறேன். ஆனால், நான் ஒரு வாக்குறுதி அளிக்கிறேன். நீண்ட காலப்போக்கில் உன் வாழ்க்கையில் சமாதானம் வெள்ளம்போல் புரண்டோடும். ஏசாயாவில் வாசிக்கிறோம். அவர்களுடைய சமாதானம் வெள்ளம்போல் புரண்டோடும் (ஏசாயா 66:12). ஒரேவொரு குறைவுதான் இருக்கும். மோட்டார் சைக்கிள் இருக்காது. இந்த ஒரேவொரு குறைதான் இருக்கும். ஆனால் உன் நித்திரை உனக்கு மிகவும் இன்பமாக இருக்கும். என்னுடைய தனிப்பட்ட அனுபவத்திலிருந்து நான் சொல்லுகிறேன். நாம் ஆசீர்வாதம் என்று நாம் ஆசையாய்ப் பின்தொடர்கிற பல காரியங்கள் நம் தூக்கத்தைக் கெடுத்துவிடும். அப்போதுதான் தெரியும். “ஓ! தூக்கம் என்பது இவ்வளவு அருமையானது!” ஒன்று எவ்வளவு அருமையானது என்று எப்போது தெரியவரும் என்றால் அதை இழந்தபிறகுதான் தெரியவரும். வழக்கமாகப் படுத்தவுடன் தூக்கம் வந்துவிடும். ஆனால், இப்போது தூக்கம் வருவதற்காகப் போராடுகிறோம் என்றால் “தூக்கம் என்பது தேவனுடைய ஆசீர்வாதம்” என்று அப்போதுதான் தெரியும். சங்கீதத்தில் சொல்லப்பட்டுள்ள வசனம் இப்போது நினைவுக்கு வருகிறது. “அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்” (சங். 127:3). “தமக்குப் பிரியமானவர்கள் நித்திரையாயிருக்கும்போதே தேவன் அவர்களுடைய தேவைகளை அவர்களுக்கு வழங்குகிறார்” என்பதுதான் இந்த வசனத்தின் சரியான மொழிபெயர்ப்பாகும். இன்னொரு வசனம்கூட உண்டு. “வேலை செய்கிறவன் கொஞ்சமாய்ப் புசித்தாலும் அதிகமாய்ப் புசித்தாலும் அவன் நித்திரை அவனுக்கு இன்பமாயிருக்கும்” (பிரசங்கி 5:12).

இவ்வளவு விளக்கங்கள் எதற்காகச் சொல்ல வேண்டும்? ஏனென்றால், இயேசுகிறிஸ்துவின் குணத்தை வெளியாக்குவதற்கு நாம் நிச்சயமாக ஒரு விலை செலுத்த வேண்டும். அந்த விலை செலுத்தும்போது மிகவும் வலிக்கும். “எங்கள் வங்கியில் முதலீடு செய்தால் நாளைக்கே வட்டியோடு திருப்பிக்கொடுப்போம்,” என்பது ஒரு வங்கியின் திட்டம். “நீங்கள் செய்யும் முதலீட்டுக்கு 20 வருடம் அல்லது 30 வருடம் கழித்துத்தான் பலன் கிடைக்கும்,” என்பது இன்னொரு வங்கியின் திட்டம். இதில் எந்த வங்கியின் திட்டத்தை மக்கள் தெரிந்தெடுப்பார்கள்? முதலாவது திட்டத்தைத்தான் தெரிந்தெடுப்பார்கள். ஏனென்றால், 30 வருடம் கழித்து அந்த வங்கி இருக்குமா இல்லையா என்று கூடத் தெரியாதே. எனவே இன்றைக்கு முதலீடு செய்து நாளைக்கு அதைத் திரும்பப் பெறுவதுதான் எல்லாருக்கும் பிடித்த காரியம். இதற்குப் பெரிய தெய்வீக ஞானம் அவசியம் இல்லை. கொஞ்சம் தெளிந்த மனித ஞானமே போதும். ஆனால், இது பொய்யான வாக்குறுதி இல்லையா? இப்படிப்பட்ட பொய்யான வாக்குறுதிகளை நம்பி மக்கள் ஏமாந்து போகவில்லையா? 15% அல்லது 20% வட்டி தருகிறோம் என்று சொன்னவுடன் மக்கள் போய் முதலீடு செய்கிறார்களே! இப்படி முதலீடு செய்து தங்கள் முதலீட்டையும் இழந்தவர்கள் பலர் உண்டு. ஆனால் 7 அல்லது 8 சதவீதம் போதும் என்றவர்கள் சமாதானத்தோடு வாழ்கிறார்கள்.

ஆக்கம் கருதி முதலிழக்கும் தொழிலை
ஊக்கார் அறிவுடையார்

விலை கொடுக்க வேண்டும். சரி. இது தனிப்பட்ட விதத்தில் இயேசு கிறிஸ்துவைக் காண்பிப்பதற்கு. நாம் ஒரு குகையில் வாழ்ந்துகொண்டுகூட இயேசு கிறிஸ்துவை வாழ முடியும். எவ்வளவு நேரம் தூங்குகிறேன். எவ்வளவு சாப்பிடுகிறேன் என்பதையெல்லாம் வைத்து இயேசு கிறிஸ்துவைக் காண்

பிக்க முடியும். ஆனால், அப்படிக் காண்பிக்கப்படும் இயேசுகிறிஸ்து மிக மிகக் குறைவான இயேசு கிறிஸ்து.

**கூட்டு வாழ்க்கை—அன்பு**

எங்கு தேவனுடைய பிள்ளைகள் கூடிவாழ்கிறார்களோ, எங்கு தேவனுடைய பிள்ளைகள் பகிர்ந்து கொண்டு வாழ்கிறார்களோ அங்குதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மிக மகிமையாகக் காண்பிக்க முடியும். இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவைத் தனிப்பட்ட விதத்தில் காண்பிக்க முடியுமா? முடியும். ஆனால், இயேசு கிறிஸ்துவை எங்குதான் மகிமையாகக் காண்பிக்க முடியும்? நாம் கூடிவாழும்போதுதான் இயேசு கிறிஸ்துவை மகிமையாகக் காண்பிக்க முடியும். புதிய ஏற்பாடு முழுவதும் அதைப்பற்றிப் பேசுகிறது.

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்க ளென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்," என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார் (யோவான் 13:35). நாம் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் என்று இந்த உலகம் எப்படி அறிந்துகொள் ளும்? உலகம் என்றால் கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்கள், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்கள், நாம் இயேசுவின் சீடர்கள் என்று அவர்கள் எப்படி அறிந்துகொள்வார்கள்? நாம் கழுத்தில் மாட்டி யிருக்கிற சிலுவையை வைத்துத் தெரிந்துகொள்வார்களா? போட்டிருக்கிற உடையை வைத்துத் தெரிந்துகொள்வார்களா? நம்மில் எதைப் பார்த்து நாம் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் என்று அவர்கள் அறிந்துகொள்வார்கள். நம்முடைய அறையில் அல்லது வீட்டில் ஒரு வசனம் எழுதி ஒட்டி வைத்திருக்கிறோம். இதைப் பார்த்து நாம் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் என்று அவர்கள் அறிந்து கொள்வார்களா? அப்படி இயேசு கிறிஸ்து சொன்னாரா?

இயேசு கிறிஸ்துவைப் பொறுத்தவரை ஒன்றேவொன்றுதான் காரியம். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதினாலே" நீங்கள் இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் என்று இந்த உலகம் அறிந்துகொள் ளும். வசனம் ஒட்டுவது, சிலுவை டாலர் போடுவது போன்ற காரியங்களைச் செய்வதற்கு ஏதாவது விலை செலுத்தவேண்டுமா? இது கஷ்டமான காரியமா? இல்லை, இது மிக எளிமையான காரியம். வீட்டில் 100 வசனங்கள் ஒட்டிவைப்பதில் எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. ஒரு சிலுவை டாலர் போடுவதில் எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. ஆனால், ஒருவரிலொருவர் அன்பாயிருப்பது கடினம். இருதயத்திலிருந்து ஒருவரையொருவர் அன்புசெய்வது கடினம். மேலோட்டமாக, நுனி நாக்கில் மேல்தட்டு மக்கள் செய்வதுபோல் அன்புகூருவது எளிது. நான் அதைச் சொல்லவில்லை. கை குலுக்கிக்கொள்வார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லிக்கொள்வார்கள். நான் அதைச் சொல்லவில்லை. ஒருவர்மேல் ஒருவர் அன்பாயிருப்பது கடினம். மிகக் குறிப்பாக நாம் கூடி வாழும்போது. என்றைக்காவது ஒருநாள் நாம் ஒருவரையொருவர் சந்திக்கும்போது நாம் நம் அன் பைக்காண்பிப்பது எளிது.

உண்மையைச் சொல்லுகிறேன். ஒருவனுடைய உண்மையான அன்பு அதிகமாக சோதிக்கப்படுகிற இடம் எது தெரியுமா? வீடு. அதுவும் குறிப்பாக கணவன் மனைவிக்கிடையே, பெற்றோர் பிள்ளை களுக்கிடையே. எதையும் ஏனோதானோவென்று எடுத்துக்கொள்ள வேண்டாம். திருமணமாகி ஒரு வருடம், 5 வருடங்கள், 10 வருடங்கள் ஆகியிருக்கலாம். என்ன நடக்கும்? "உம்மை எனக்குத் தெரி யாதா?" என்று கணவனும் "உம்மை எனக்குத் தெரியாதா?" என்று மனைவியும் நினைக்க ஆரம் பித்துவிடுகிறார்கள். 20, 30 வருடங்கள் ஆனவுடன் ஒருவருடைய குறைபாடு மற்றவருக்கு அத்துப் படி. "அவர்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதினாலே என்னுடைய சீடர்கள்" என்று இந்த உல கம் அறிந்துகொள்ளும்.

என்னைப் பொறுத்தவரை சபை என்றால் என்ன? இரண்டு அல்லது ஒரு வாக்கியத்தில் வரையறுக்க வேண்டும் என்றால் "தேவனுடைய மக்கள் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து வாழ்கிற வாழ்க்கையே சபை". "யோவான் 13:35 என்ற ஒரேவொரு வசனத்தை மட்டும் வைத்துக்கொண்டு நீங்கள் இதுதான் சபை என்று சபைக்கு வரையறையெல்லாம் கொடுக்க முடியாது," என்று நீங்கள் சொல்லலாம். ஆளாளுக்கு ஒரு வசனத்தை உருவி "இதுதான் சபை" என்று இப்படி வியாக்கியானமும், வரை யறையும் தர முடியுமா என்றால் நீங்கள் முழு புதிய ஏற்பாட்டையும் வாசித்துப் பாருங்கள். 10 தடவை வாசித்துப் பாருங்கள். இந்த வரையறை செல்லுபடியாகும். எனவே, சபை என்பது நாம் அடிக்கடி வலியுறுத்துவதுபோல ஞாயிற்றுக்கிழமைக் கூட்டம் மட்டும் அல்ல. இன்னும் சொல்லப் போனால் ஞாயிற்றுக்கிழமை கூட்டம் அல்ல சபை. தேவனுடைய மக்களாகிய நாம் ஒருவரி லொருவர் அன்புகூர்ந்து வாழும் வாழ்க்கைதான் சபை.

### அன்பு—சிலுவை வழி

அன்புகூர்வதென்றால் அதில் ஆயிரம் காரியங்கள் அடங்கும். அன்புகூர்வதென்றால் என்னவென்று நான் ஒரு காரியத்தைச் சொல்ல முடியும். அன்பு கூர்வதென்றால் என்ன? காலையில் எழுந்தவுடன் உங்கள் மனைவிக்குக் காய்கறிகள் வெட்டிக் கொடுப்பது அல்லது நீங்கள் குடித்த தேநீர் கோப்பையை நீங்களே கழுவி வைப்பது, நீங்கள் சாப்பிடுகிற தட்டை நீங்கள் கழுவித் துடைத்து வைப்பது. நம்முடைய கலாசாரத்தில் இவைகளைக்கூட அன்புப் பட்டியலில் கொண்டுவர வேண்டி யிருக்கிறது. இப்படி ஆயிரம் காரியங்கள் அல்லது ஒருநாள் உணவு நன்றாக இல்லையென்றாலும் ஒன்றும் சொல்லாமல் மனமகிழ்ச்சியுடன் சாப்பிடுவது. உங்கள் துணியை நீங்கள் மடித்து வைப்பது, வீட்டைப் பெருக்குவது. இப்படி 1000 காரியங்களைச் சொல்லலாம். சுருக்கமாக ஒன்றேவொன்றைச் சொல்லமுடியும்.

அன்பு கூருவதென்றால் என்னவென்று சொல்லமுடியுமா? எதிர்பார்க்காமல் காரியங்களைச் செய் வதா...இழப்பதா....தியாகமா...சகிப்பதா...தன்னைப் பலியாக்குவதா... இவையெல்லாவற்றிற்கும் ஒரு வார்த்தை உண்டு. *சிலுவை,* வேதம் பயன்படுத்துகிற வார்த்தை சிலுவை. ஒன்றேவொன்று தான் அன்பு. சிலுவையின் வழியாகக் காண்பிக்கப்படுவது மட்டும்தான் தேவனுடைய பார்வையில் அன்பு. Humam Sentiments எல்லாம் அன்பு என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது. இதைக்குறித்து நாம் பல மாதங்கள் பேச வேண்டியிருக்கும். சிலுவையின்மூலமாக நாம் காண்பிப்பது மட்டும்தான், சிலுவையின்வழியாக நாம் கூருவது மட்டும்தான் அன்பு என்பதற்கு நாம் 10 வாரங்கள் பேச வேண்டியிருக்கும். ஆனால், நாம் இந்தக் காரியத்தை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சிலுவையின்வழியாக மட்டும்தான் நாம் தேவனுடைய அன்பைக் காண்பிக்க முடியும். அதற்கு வேறு சுருக்கு வழி இல்லை. அவர் சிலுவையின்வழியாகக் காண்பித்த அன்பு என்ன? நாம் பாவிகளாக இருந்தபோது, எதிரிகளாக இருந்தபோது, அன்புகூருவதற்கு எந்த இலட்சணமும் இல்லாதவர்களாக இருந்தபோது அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்தார். எனவே, சபை என்றால் என்ன? தேவனுடைய பிள்ளைகள் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து வாழும் வாழ்க்கைதான் சபை.

### பக்திவிருத்தியடைதல் அல்லது கட்டியெழுப்பப்படுதல்

1 கொரிந்தியர் 14ஆம் அதிகாரத்தை நாம் வாசித்தோம். உண்மையிலேயே நாம் அன்புகூர்ந்து வாழும்போது தேவனுடைய மக்கள் வளர்வதற்கும், அவர்கள் முன்னேறுவதற்கும், அவர்கள் கனி கொடுப்பதற்கும், அவர்கள் வாழ்க்கை ஒரு முழுமையான வாழ்க்கையாக மாறுவதற்கும் என் னென்ன செய்ய வேண்டுமோ அவை எல்லாவற்றையும் நம் திராணிக்கு உட்பட்டு நாம் செய்வோம். இதை நான் மீண்டும் சொல்லுகிறேன். புதிய ஏற்பாடு பயன்படுத்துகிற வார்த்தை பக்திவிருத்தி அல் லது கட்டியெழுப்புதல். நாம் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்தால் தேவனுடைய பிள்ளைகள் பக்தி விருத்தியடைவதற்கு அல்லது கட்டப்படுவதற்கு அல்லது கட்டியெழுப்பப்படுவதற்கு நாம் செயல்படு வோம். பக்திவிருத்தியடைவது அல்லது கட்டியெழுப்பப்படுவது என்றால் என்ன பொருள்? ஒரு சகோதரன் இருக்கிறான். இவனுக்குள் இருக்கும் ஆற்றல் என்னவென்று அவனுக்குத் தெரியாது. நமக்கும் தெரியாது. அவனுடைய பெற்றோர்களுக்கும் தெரியாது. அவன் எப்படிப்பட்ட ஆளாக வருவான் என்று தெரியாது. தேவனுடைய வேலைக்காரனாக மாறுவாரா? இசையமைப்பாளராக வருவானா? இலக்கியவாதியாக மாறுவானா? நமக்குத் தெரியாது. இப்போது அவன் ஒரு சிறு குழந்தை. ஓடி விளையாடிக்கொண்டிருக்கிறான். இந்த மனித உயிர் வளர்ந்து, மலர்ந்து, காய்த்து, கனி கொடுப்பதற்காக அவனுடைய பெற்றோர், உறவினர்கள் எல்லாவற்றையும் செய்கிறார்கள். நல்ல உணவு கொடுக்கிறார்கள். நல்ல கல்வி கொடுக்கிறார்கள். நல்ல ஒழுக்கத்தைப் புகட்டு கிறார்கள். இதற்குப் பெயர்தான் கட்டியெழுப்புதல். இந்தச் சிறு குழந்தையின் வாழ்க்கையை நாம் நாசமாக்கிவிடவும் முடியும். தன்னைவிட தன் மகன் அல்லது மகள் பெரிய ஆளாக மாற வேண்டும் என்பது எல்லாப் பெற்றோர்களின் விருப்பம்.

தேவனுடைய ஜீவன் அவர்களுடைய பிள்ளைகளுக்குள் இருக்கிறது. அந்த ஜீவன் வளர்ந்து, மலர்ந்து, காய்த்து, கனிகொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாமும் விரும்புகிறோம். இது தானாகவே வளர்ந்து விடுமா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லாருக் கும் தேவன் பாவமன்னிப்பையும், நித்திய ஜீவனையும் வழங்கியிருக்கிறார். ஆனால், எல்லாருக் குள்ளுமிருந்து கிறிஸ்துவின் ஜீவன் வெளியாகிறதா? நாம் ஒருவரையொருவர் பார்க்கிறோம். ஒருவரோடொருவர் பழகுகிறோம். இதில் பலதடவை "நான் மற்றவர்களில் கிறிஸ்துவை பார்ப்ப தில்லை. மாறாக, வேறொரு மகா பாவியைத்தான் பார்த்தேன்" என்று சொல்லமுடியும். மற்றவர்

களில் கிறிஸ்து வாழ்வதை ஏன் பார்க்கமுடியவில்லை? மாறாக ஒரு பாவியாகிய மனிதன் வாழ்வதைப் பார்க்கிறோம். தேவனுடைய ஜீவன் அவர்களுக்குள் இருக்கிறது. இதை மறுக்க முடியாது. இந்தச் சிறு குழந்தையால் இன்றைக்கு ஒரு பிரச்சினைத் தீர்க்கமுடியாமல் போகலாம். அந்த அளவுக்கு அவனுடைய ஜீவன் வளரவோ, பூக்கவோ, காய்க்கவோ, கனிகொடுக்கவோ இல்லை. ஆனால், இன்னும் *10* வருடங்களில் அதை அவனிடத்தில் எதிர்பார்க்கலாம். நம் எல்லாருக்குள்ளும் தேவனுடைய ஜீவன் இருக்கிறது. ஆனால், அந்த ஜீவன் இன்னும் வளர்ந்து, மலர்ந்து, காய்த்து, கனிகொடுக்கவில்லை. எப்போதாவது கிறிஸ்துவின் குணம், பண்பு கொஞ்சம் நம்மிடத்திலிருந்து வெளிப்படுகிறதேதவிர நிரந்தரமாக அவருடைய குணம் நமக்குள் உருவானதுபோல் தெரியவில்லை. சில செடிகளில் அவ்வப்போது சில பூக்களைப் பார்க்கலாம். ஆனால், அதற்குப்பின் காய் வரவேண்டும், கனிவர வேண்டும். முதல் கனியைப் பார்க்கும்போது அந்தச் செடியை வளர்ப்பவருக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். “என் உழைப்பின் முதல் பலன்” என்று மகிழ்வார். சிறு பிள்ளைகள் செடி வளர்க்கும்போது ஒவ்வொரு நாளும் அதைப் போய்ப்பார்ப்பார்கள். முதல் பூவைப் பார்த்தவுடன் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். இதுபோல் நம்மெல்லாருக்குள்ளும் தேவன் கிறிஸ்துவை வழங்கியிருக்கிறார். தேவன் தம் ஜீவனை நமக்குத் தந்திருக்கிறார். ஒரு சின்னப் பூவைப் பார்க்கும்போது தேவன் மகிழ்ச்சியடைகிறார். ஏதோ ஒருவிதத்தில் அவருடைய குணம் நமக்குள் உண்டாயிருக்கும்போது.

ஒருவன் எனக்கு நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறான். நியாயப்படி நான் அவனைப் பழிவாங்க வேண்டும். ஆனால், அதற்குப் பதிலாக “பரவாயில்லை, விட்டுவிடலாம்” என்ற கிறிஸ்துவின் பண்பு நமக்குள்ளிருந்து வெளியாகிறது என்று வைத்துக்கொள்வோம். தேவன் எதைப் பார்க்கிறார்? தேவனுடைய ஜீவனிலிருந்து பூத்த ஒரு சிறிய பூவைப் பார்க்கிறார். சில சமயங்களில் ஒன்றிரண்டு பூக்கள் பூக்கும். ஆனால் அவைகள் சில சமயங்களில் கொஞ்சக் காலத்தில் உதிர்ந்துவிடும். பல சமயங்களில் நம் கிறிஸ்தவ வாழ்க்கை பூவே இல்லாத கிறிஸ்தவ வாழ்க்கை இல்லை. மாறாக பூக்கும். ஆனால், அவைகள் காய்த்து, முதிர்ந்து கனிகொடுப்பதில்லை. அவைகள் உதிர்ந்துவிடும். இன்னும் சில செடிகள், இந்த வருடமும் கனி கொடுக்கும், அடுத்த வருடமும் கொடுக்கும், அதற்கடுத்த வருடமும் கொடுக்கும். “அவன் தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்” (சங். *1:3*). “நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும் பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்” (வெளி. *22:2*).

## கூடி வாழ்வதின் நோக்கம்

உண்மையாகவே நாம் கூடி வாழ்வதின் நோக்கம் என்ன? ஒவ்வொருவரிலும் அப்படி கிறிஸ்து வளர்ந்து வெளியாவதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமோ அதை நாம் செய்ய வேண்டும். இதை யார் செய்வது? ஒருவர் மட்டும் செய்துவிட முடியுமா? மிக அதிகமாக அன்புகூருகிற தகப்பனாக இருந்தால்கூட அவர் மட்டுமே தன் குழந்தையை வளர்த்துவிட முடியுமா? அவனைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். அங்கு பல ஆசிரியர்கள் அவனுக்குப் பாடம் கற்றுக்கொடுப்பார்கள். அதுபோல நமக்குள் கிறிஸ்து வளர ஒரேவொரு மனிதர் பாடுபட்டால் கிறிஸ்து வளர்ந்துவிட முடியாது. நாம் எல்லாரும் ஒருவருக்குள் ஒருவர் கிறிஸ்து வளர ஏதோவொன்றைச் செய்ய முடியும். குறிப்பாக என்ன செய்ய முடியும்? என்னுடைய வாழ்க்கையில் நான் கிறிஸ்துவை எப்படி அனுபவிக்கிறேன் என்று சொல்வதின்மூலமாக அந்தக் கிறிஸ்து மற்றவர்களுக்குள்ளும் வளர்வதற்கு அல்லது மலர்வதற்கு நான் வேலைசெய்ய முடியும். ஏதோவொரு சிறிதளவில் கிறிஸ்து நமக்குள் வளர்வார், சிறிதளவு உருவாவார், சிறிதளவு நமக்குள் கனிகொடுக்க ஆரம்பிப்பார். இதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

*1* கொரிந்தியர் *12, 14*, மற்றும் எபேசியர் *4* ஆகிய அதிகாரங்களை வாசித்துப்பாருங்கள். ஒரு சகோதரனுக்குள் இன்று நான் சில பூக்களைப் பார்க்கிறேன். இன்னும் சில *5* ஆண்டுகள் கழித்து அவரிடத்தில் அந்தப் பூக்களையும் காணவில்லை. அந்தப் பூக்களில் இயற்கையான வளர்ச்சியாக காய்களையோ, கனிகளையோ காணவில்லையென்றால் அதற்கு யார் பொறுப்பு? நான் பொறுப்பு, நீங்கள் பொறுப்பு. என்னிடத்தில் நீங்கள் சில பூக்களைப் பார்க்கிறீர்கள். மிகவும் மகிழ்ச்சியடைகிறீர்கள். நம்முடைய சகோதர சகோதரிகளுக்குள் அழகான சில பூக்களைப் பார்க்கிறீர்கள். *5* வருடம் கழித்து அவருடைய தோட்டம் மிகச் செழிப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள். ஆனால் *5* வருடம் கழித்துப் பார்க்கிறீர்கள். அந்தப் பூக்கள் இருந்த இடம்கூட காணவில்லை. கனிகளை விடுங்கள். பூக்களைக்கூட காணவில்லை. இதற்குக் காரணம் யார்? நாம்.

மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள். அவர்களுடைய பரீட்சைத் தாளைத் திருத்தும்போது அவர்கள் தேர்ச்சி பெறுவதற்குக் குறைவான மதிப்பெண்ணைக் கொடுப்பது எனக்கு வருத்தமாக இருக்கும். குறைவான மதிப்பெண்ணைப் பெற்று அவர்கள் தோற்றுப்போவது எனக்கு வருத்தமாக இருக்கும். மாணவர்கள் தேர்வில் தேர்ச்சி பெறவில்லையென்றால் அதற்கு மாணவன் மட்டுமல்ல, ஆசிரியரும் ஒரு காரணம். பொறுப்பு கூட்டானது. மாணவன்தான் காரணம் என்று சொல்லி ஆசிரியர் தப்பித்துக் கொள்ள முடியாது.

அதுபோல, என் சகோதரனிடத்தில் நான் இன்றைக்குக் காண்கிற பூக்களை நான் இன்னும் இரண்டு வருடங்கள் கழித்துக் காணவில்லையென்றால் பொறுப்பு அந்தச் சகோதரனுடையது மட்டும் அல்ல. சகோதரனுடைய பொறுப்பு இருக்கிறது. அதைத் தட்டிக்கழிக்க முடியாது. ஆனால் பொறுப்பு யாருக்கும் இருக்கிறது? நம் எல்லாருக்கும் இருக்கிறது. "ஆண்டவரே, அந்தச் சமயத்தில் நான் பாய்ச்சவேண்டிய தண்ணீரை நான் பாய்ச்சவில்லை. போடவேண்டிய உரத்தை நான் போடவில்லை. நான் சிறிதளவு கிறிஸ்துவை என் சகோதரனுக்கு வழங்கியிருக்க முடியும். ஏற்ற சமயத்தில் அந்தக் கிறிஸ்துவை நான் காண்பிக்கவும், வழங்கவும் தவறினேன். எனவே, உயிர்த்துடிப்புடன் இருந்த பூக்களெல்லாம் இப்போது உதிர்ந்துவிட்டன," என்பதை நாம் உணர வேண்டும். "இதற்கு நான் பொறுப்பு இல்லையே! எனக்கு ஒன்றும் கிறிஸ்துவை அவ்வளவாகத் தெரியாது. நான் இன்னும் புதிய ஏற்பாட்டையே வாசித்து முடிக்கவில்லை. முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க இன்னும் ஒரு வருடம் ஆகும். எனவே நான் என்ன செய்ய முடியும்?" என்று கையை விரிக்க முடியாது. நிறைய செய்ய முடியும்.

ஒருவேளை ஒருவர் வாராவாரம் சாட்சி சொல்லாமல் போகலாம். சாட்சி சொல்ல வேண்டும் என் பதற்காக செயற்கையான சாட்சிகளைச் சொல்ல வேண்டாம். "நான் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தேன். போகவேண்டிய இடத்துக்கு நேரம் ஆகிக்கொண்டிருந்தது. ஜெபித்தேன், ஜெபித்து முடிப்பதற்குள் ஒரு பேருந்து வந்து நின்றது," என்பதுபோன்ற சாட்சிகளை புனைந்து சொல்ல வேண்டாம். ஆனால், ஒரு மாதம் முழுவதும் ஒருவன் பகிர்ந்துகொள்வதற்கு அவனிடம் ஒரு சாட்சி கூட இல்லையென்றால் அதைக் கொஞ்சம் பரிசீலனைசெய்து பார்க்க வேண்டும். மாதம் முழுவதும் தேவன் ஒன்றுகூடச் செய்யவில்லையா? சரி, ஒரு மாதத்தை விட்டுவிடுவோம். இரண்டு மாதங்களில்? தினமும் இல்லாமல் போகலாம், வாராவாரம் இல்லாமல் போகலாம், மாதாமாதங்கூட இல்லாமல் போகலாம், நாம் மாதந்தோறும் கனிகொடுக்கிற செடிகளாக இல்லாவிட்டாலும், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் மிகவும் சுறுசுறுப்பாக செயல்படுகிறவர். பரிசுத்த ஆவியான வர் பாய்ந்தோடுகிற நதிதானேதவிர, அவர் தேங்கிநிற்கிற நதியல்ல. நம் வாழ்க்கையில் சிறிய அல் லது பெரிய காரியங்களை அவர் செய்துகொண்டேயிருப்பார். நாம் கொடுக்கிற எல்லா சாட்சிகளும் பெரிய சாட்சிகளாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. "நான் 17 நாட்கள் சுயநினைவில் லாமல் இருந்தேன். அதற்குப்பின் விழிப்பு வந்தது." இப்படிப்பட்ட சாட்சிகள் வாழ்க்கையில் ஒருமுறைதான் கொடுக்க முடியும்.

## நம் பொறுப்பு

ஆனால், நம் வாழ்க்கையின் பல பகுதிகளில் தேவன் வேலை செய்துகொண்டிருப்பார். அதை நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும். அப்படி நாம் பகிர்ந்துகொள்ளத் தவறும்போது மற்றவர்களுடைய வளர்ச்சியிலே நம்முடைய பொறுப்பை நாம் நிறைவேற்றத் தவறுகிறோம். எந்த அளவுக்கு நாம் நம் சகோதர சகோதரிகளுக்குள் இருக்கிற கிறிஸ்து வளர்வதற்கும், மலர்வதற்கும், கனிகொடுப் பதற்கும் நம் இருதயத்தில் பாரமாக இருக்கிறதோ அந்த அளவுக்குத் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். அவ் வளவு சீக்கிரமாகத் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்று நாம் சொல்வதில்லை. "தசமபாகம் கொடுங்கள், தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்," என்று பலர் சொல்வதுபோல் சொல்லி எத் தனையோ வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், நம் சகோதர சகோதரிகள் ஒரு பொருளாதார நெருக் கத்தில் இருக்கிறார்கள். அப்படி அவர்களுடைய பொருளாதாரத் தேவையிலே, கிறிஸ்து போதுமான வர், இயேசு கிறிஸ்துவின்மேல் வைக்கிற விசுவாசம் போதுமானது என்பதை நம் சகோதர சகோ தரிகள் ருசிக்க வேண்டும் என்பதற்காக நாம் நம் கைகளைத் திறந்து காணிக்கை வழங்குகிறோம் என்று வைத்துக்கொள்வோம். தேவன் இதை ஆசீர்வதிப்பாரா? கண்டிப்பாக ஆசீர்வதிப்பார். 100 மடங்கு ஆசீர்வதிப்பார். நம்முடைய நெருக்கத்தில் தேவன் நம்மை 100 மடங்கு ஆசீர்வதிப்பார். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. நாம் தசமபாகத்தை வலியுறுத்தவில்லை என்பதற்காக நம் முடைய சகோதர சகோதரிகளின் பொருளாதார நெருக்கத்தில், கூட்டுப் பொருளாதாரத் தேவையில், நாம் பங்குபெறத் தேவையில்லை என்று நாம் நினைத்துவிடக்கூடாது. அது அவசியம் இல்லை

என்று நாம் நினைத்துவிடக் கூடாது. அதற்காக “நீ சாராயம் காய்ச்சி வந்த பணத்தில் தசமபாகம் கொடுத்தாலும் கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார். நீ திருட்டுத்தனமாக சம்பாதித்த பணத்தில் தசம பாகம் கொடுத்தாலும் கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்,” என்று நான் சொல்லவில்லை. எப்படியோ தசமபாகம் கொடுத்தால் போதும், அந்தப் பணம் எப்படி வந்தாலும் பரவாயில்லை என்று நாம் ஒருபோதும் சொல்லவில்லை.

நாம் நம் சகோதர சகோதரிகளுக்குள் கொஞ்சம் கிறிஸ்துவைப் பார்க்கிறோம். அவர்களுக்குள் இன் னும் கொஞ்சம் கிறிஸ்துவை வழங்க வேண்டும் என்கிற பாரம் நமக்கு இருக்குமென்றால் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். இது யாருடைய பாரம்? இது மனிதனுடைய பாரமா அல்லது தேவனுடைய பாரமா?

உங்களிடம் இருக்கிற எல்லாப் பணத்தையும் நீங்கள் வங்கியில் முதலீடு செய்துவிட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒரு மனிதனை நம்பி நம்மிடம் இருக்கும் எல்லாப் பணத்தையும் வட்டிக்குக் கொடுத்துவிட்டோம் என்று வைத்துக்கொள்வோம். வெளிநாட்டில் 10 ஆண்டுகள் சம்பாதித்த எல்லாப் பணத்தையும் ஒரேவொருவனை நம்பி அவனிடம் முதலீடு செய்துவிட்டோம் என்று வைத்துக்கொள் வோம். இப்போது ஒவ்வொரு நாளும் நம் இருதயம் எதில்தான் இருக்கும்? காலையில் எழுந்தவுடன் என் மனம் எதில்தான் இருக்கும்? என் பணம் என்னவாயிற்று? என் வங்கி என்னவாயிற்று? சிலர் பங்குகளில் முதலீடு செய்கிறார்கள்? காலையில் எழுந்தவுடன் செய்தித்தாள்களை எடுத்து வைத்துக் கொண்டு “என் பங்கின் விலை என்ன?”வென்று பார்க்கத் தொடங்கிவிடுகிறார்கள். பலருடைய வலை தளத்தில் ஒரு ஜன்னல் எப்போதுமே திறந்திருக்கும். எதற்காக? அவர்களுடைய பங்குச் சந்தையின் உயர்வுகள் என்ன? சரிவுகள் என்னவென்று பார்த்துக்கொண்டேயிருப்பார்கள். இது சரிதானா? அவர்கள் சம்பாதித்த எல்லாவற்றையும் பங்குகளில்தான் வைத்திருக்கிறார்கள். பங்கு உயரும்போது அவர்களுடைய மகிழ்ச்சி உயர்கிறது. 100 ரூபாய்க்கு வாங்கியது இன்று 1000 ரூபாய்க்கு உயர்ந் திருக்கிறதென்றால் அவர்களுடைய சந்தோஷம் அதிகரிக்கிறது. இதுதான் பாரம்.

தேவன் தம் மரணம், உயிர்த்தெழுதல்மூலமாகச் சம்பாதித்த அவருடைய ஜீவனையே நமக்குள் முதலீடு செய்திருக்கிறார். வெறும் பணத்தை அல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் மரணம், உயிர்த்தெழுதல்மூலமாக தம் ஜீவனையே நம்மெல்லாருக்குள்ளும் முதலீடு செய்திருக்கிறார் “அழி வுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக் கிறீர்களே,” என்று பேதுரு எழுதுகிறார் (1 பேதுரு 1:19).

தேவன் அதைக்குறித்து மிகவும் பாரப்படுவார். “நான் முதலீடு செய்த ஜீவன் என்னவாயிற்று?” என்று அவர் பார்க்கிறாரா? “நான் கொடுத்த 5 தாலந்து என்னவாயிற்று? நான் கொடுத்த 2 தாலந்து என்னவாயிற்று? நான் கொடுத்த 1 தாலந்து என்னவாயிற்று?” என்று அவர் கேட்கிறாரா? அல்லது லூக்காவில் பார்ப்பதுபோல், இந்த வருடம் இந்த மரம் கனிகொடுக்கவில்லையே என்னவாயிற்று? தேவன் தம் பிள்ளைகள் ஒவ்வொருவருக்குள்ளும் தம் ஜீவன் வளர வேண்டும், காய்க்க வேண்டும், கனிகொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார், எதிர்பார்க்கிறார். அப்படியானால் இது யாருடைய பாரம்? தேவனுடைய பாரம். அதே பாரம் எனக்குள் வருமென்றால் நான் யாரோடு பங்கு பெறு கிறேன்? தேவனோடு பங்கு பெறுகிறேன். இப்போது நாம் பேசுவதற்குக் காரணம் என்ன? ஏன் பேச வேண்டும்? நாம் ஏன் பாட வேண்டும்? ஏன் ஜெபிக்க வேண்டும்? ஏன் தேவனைத் துதிக்க வேண் டும்? நன்றாக வளர்ந்து வந்த ஒரு செடி இப்போது கருகிப்போகிறது. அதைப் பார்த்தவுடன் நமக்கு என்ன வரும்? தண்ணீர் ஊற்றவேண்டும் என்ற எண்ணம் வரும், இல்லையா? அது வளராத செடி என்றால் பரவாயில்லை. நன்றாக வளர்ந்துவந்த செடி. அதில் ஒரு பூவும் மலர ஆரம்பித்துவிட்டது. அந்தச் சமயத்தில் அது வாட ஆரம்பிக்குமென்றால் அதைப் பார்ப்பவன் தனக்கு எவ்வளவு வேலை இருந்தாலும் கொஞ்சம் நேரம் ஒதுக்கி அதற்குத் தண்ணீர் ஊற்றுவான். அதுபோல நாம் பாடுவது, நாம் துதிப்பது, ஜெபிப்பது, பேசுவது, பகிர்ந்துகொள்வது ஆகியவைகளெல்லாம் எதற்காக? சிறிதளவு தண்ணீரை ஊற்றுவதால் என்னுடைய சகோதர சகோதரிகளுக்குள் கிறிஸ்து சிறிதள வாவது வளர்வாரே? தண்ணீர் மிக மலிவாகத்தான் கிடைக்கிறது. ஆனால் அதற்காகக்கூட நாம் கொஞ்சம் விலைக்கிரயம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஒரு பயிற்சியை நான் சொல்லுவேன். நீங்கள் ஒரு செடியை நட்டி அதை முழுசாய் வளர்த்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்துவின் ஜீவன் ஒரு மனிதனுக்குள் வளர்வதென்றால் என்னவென்பதற்கு அது ஒரு நல்ல நிழலாக இருக்கும். செடியை வளர்க்கும்போது நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் மற்றவர்களுக்குள் கிறிஸ்துவை வளர்ப்பதற்கு நல்ல பாடங்களாக இருக்கும்.

கடைசியாக நான் ஒன்றேவொன்றைச் சொல்லுகிறேன். நாம் பேச வேண்டும். பேச வேண்டும் என்றால் கொஞ்சம் ஆயத்தமாக வந்தால் நாம் பேசலாம். இல்லையென்றால் பேசுவது கடினம். நாம் பெரிய பேச்சாளர்கள் இல்லை. எனவே, நாம் எழுந்து நின்று பேசுவதெல்லாம் பக்திவிருத்திக் கேதுவாக இருக்கும் என்று நாம் சொல்ல முடியாது. ஆயத்தமில்லாமல் பேசும்போது நாம் பேசுகிற நிறைய காரியங்கள் அப்பிரயோஜனமான காரியங்களாக இருக்கும். ஆயத்தம் பண்ணினபிறகு நாம் தைரியமாகச் சொல்லலாம். எனவே, நாம் இன்று கேட்டதுபோல் நம்முடைய கூடுகை நாம் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கிற தேவனுடைய அன்பினாலே தேவனுடைய ஜீவன் வளர்வதற்காக நாம் இவைகளைச் செய்கிறோம். ஜெபிப்பது, பாடுவது, துதிப்பது, பேசுவது போன்றவைகளைச் செய்யும் போது நாம் உண்மையாகவே தேவனுடைய பாரத்தைப் பகிர்ந்துகொள்கிறோம். நீங்கள் இதைச் செய்துபாருங்கள். உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை ஆசீர்வாதமாக இருக்கும். இந்த ஆசீர்வாதத்தை எப்படி அளப்பது என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால், நீங்களும், உங்கள் படிப்பும் அல்லது செய்கிற வேலையும், உங்கள் குடும்பமும் ஆசீர்வாதமாக இருக்கும் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். வேண்டுமானால் நீங்கள் இதைக் கவனித்துப்பாருங்கள். "தேவனுக்காகப் பேச ஆரம்பித்தேன். மாதத்தில் ஒருமுறையாவது நான் சாட்சி சொல்ல வேண்டும் என்று நினைத்தேன் அல்லது வாரத்தில் ஒருமுறையாவது நான் ஒரு பாடலைத் தெரிந்துகொண்டு போகவேண்டும் என்று நினைத்தேன். ஓரிரண்டு வார்த்தைகளாவது நான் எல்லாரோடும் சேர்ந்து ஜெபிக்கவேண்டும் என்று தீர்மானித்தேன். அது முதற்கொண்டு தேவன் என் வாழ்க்கையின் இந்த அம்சத்தில் என்னை ஆசீர்வதிக்க ஆரம்பித்தார்," என்று நீங்கள் சொல்ல ஆரம்பிப்பீர்கள். நீங்கள் இந்த ஆசீர்வாதத்தைத் தவறவிடக்கூடாது. நான் இதை அனுபவித்திருக்கிறேன். தேவன் நம் எல்லாரையும் அப்படியே ஆசீர்வதிப்பாராக. தேவனுக்காக, நாம் தேவனுடைய பாரத்தில் பங்குபெற்று கூடிவரும்போது நாம் சிறிதளவாவது கிறிஸ்துவை மற்றவர்களுக்கு வழங்குவோம்.